திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்திலே இருப்பதுதான் 'Authoritative' என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன். மறுக்கவில்லை. அதனாலேதான் சில நேரங்களிலே ஆங்கிலத்திலே இருப்பதை நான் படித்துக்காட்டுகிறேன். மக்களவை விதிகளையும் படித்துக் காட்டுகிறேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டரி சிஸ்டத்தை பற்றியும் நான் படித்துக்காட்டுகிறேன். எனவே அனைத்தையும் ஒன்றாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த விஷயத்தில் காவல்துறை நடந்துகொண்டதும் சரி, அறிவிக்கப்படாததும் சரி, முறையல்ல என்பதை மட்டும் நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவல்துறை நடந்து கொண்டது முறையற்றது என்பதை இதிலே சொல்லக்கூடாது. காவல்துறையினர் மிக முறையாக நடந்து இருக்கிறார்கள். கைது செய்யப்பட்டது ஏன் என்கிற தகவலையும் எனக்குத் தெரிவித்து, அவர் நேற்று 3 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார் என்கிற தகவலையும் தந்தி மூலம் எனக்குத் தெரிவித்திருக்கிறபோது இந்தப் பேரவை விதியின்படி, இந்த இரண்டிலும், அவர் கைது செய்யப்பட்டதை இந்தப் பேரவைக்கு அறிவிக்கும் முன்னரே விடுதலை செய்யப்பட்ட விபரமும் வந்துவிட்ட காரணத்தால் நான் தெரிவிக்கவில்லை, எனவே இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) இந்தி படித்தால்தான் அகில இந்திய வானொலியில் வேலை என மைய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார் . திரு ச. இராமச்சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இந்தி படித்தால்தான் அகில இந்திய வானொலியில் வேலை என்ற நிலைமையை உருவாக்கும் வகையில் மைய அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கை குறித்து'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 61

அறிக்கை.

இந்திமொழி பேசாத மக்களின்மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, இந்தி மொழியைத் திணிப்பதற்கான நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருவது, இந்திமொழி பேசாத மக்களுக்குப் பெருங்கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்திமொழி பேசாத மக்கள், மாற்றம் ஒன்றை விரும்பாதவரையிலும், ஆங்கிலமே இணையத்தின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்ற உறுதிமொழி பண்டித ஜவஹர்லால்நேரு அவர்களால் தரப்பட்டும் அவருக்குப்பின் வந்த பாரதப் பிரதமர்கள் அனைவராலும் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2. இனிமேல் இந்திப் படித்தால்தான் அகில இந்திய வானொலியில் வேலைவாய்ப்பு என்ற செய்தியை மேலெழுந்தவாரியாக பார்க்கும்பொழுது மைய அரசு இந்திச் செய்தி சேகரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதாகத் தெரிகிறது. ஆனால் முழுமையாக ஆய்ந்து பார்க்கும்போது இது இந்தித் திணிப்புக்கு வழி வகுப்பதாகவும் இந்தி மொழி பேசாத மாநிலத்தில் வாழ்பவர்களை இடர்பாட்டுக்கு உள்ளாக்குவதாகவும் உள்ளதனை அறியலாம். செய்தி சேவைப் பிரிவில் பணியாற்றும் அனைவருக்கும் கட்டாயமாக இந்தி மொழியறிவு இருக்கவேண்டும் எனும் நிலை உருவாக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்தி பேசாத மாநிலத்தவர்கள் குறிப்பாக தென்னகத்தைச் சார்ந்தவர்கள் செய்திப் பிரிவின் முக்கிய பொறுப்புகளை — பதவிகளை வகிக்கும் வாய்ப்புகளை இழப்பார்கள். இந்தி பேசும் மாநிலத்தவர்களே அப்பதவிகளுக்கு நியமனம் பெற இயலும்.

3. தமிழ்நாட்டில் ஆட்சிமொழி தமிழ்—ஆங்கிலம் இணைப்பு மொழியாகும். பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட இருமொழிக் கொள்கையை 1969 ஆம் ஆண்டுமுதல் எவ்வித இடர்பாடின்றி உறுதியுடன் அரசு தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றது. பல்வேறு மொழி-பண்பாடு—நாகரீகங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை மட்டும் மைய அலுவல் ஆட்சிமொழி ஆக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து ஒருமொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமைகொள்ளச் செய்திடும் என்று உணரப்பட்டு தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 23—1—1968 அன்று தீர்மானம் மூலமும் அதுவரை உடனடி நடவடிக்கையாக ஆங்கிலம் மட்டுமே மைய ஆட்சிமொழியாக இருக்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்த வேண்டும் என புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் 13—11—1986 அன்று தீர்மானம் மூலமும் தமிழ்

நாடு சட்டமன்றத்தில் தமிழக மக்களின் எண்ணத்தை வலியுறுத்தும் வகையில் மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை தொலைக்காட்சி நிலைய முதல் அலைவரிசையில் தமிழ் ஒளிபரப்பில் மாற்றங்கள் செய்தது குறித்து 10—2—1993 இல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரத பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். இதனை உடன் கவனிப்பதாகவும் பண்டித நேரு அவர்கள் அளித்துள்ள உறுதிமொழியைத் தொடர்ந்து பின்பற்றுவதாகவும் தெரிவித்து பாரத பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். ஆனால் மைய ஆட்சி அலுவலில் ஆங்கிலத்திலிருந்து இந்தி மொழிக்கு முற்றிலுமாக மாற்றம் செய்ய தொடர்ந்து மைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவது இந்தி பேசாத மக்களுக்கு பெருத்த கவலை அளித்து வருகிறது.

4 இம்மொழிப் பிரச்சனைக்கு தீர்வுகாண ஏற்கனவே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளவாறு அனைத்து தேசிய மொழிகளும் மைய அரசின் ஆட்சிமொழியாக்கப்படவேண்டும். அதுவரை உடன் நடவடிக்கையாக ஆங்கிலம் மட்டுமே மைய ஆட்சி அலுவல் மொழியாக அறிவித்து இந்தி திணிப்பை உடனடியாக மைய அரசு நிறுத்தவேண்டும். அதற்காக மைய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும். இந்த செய்தியை மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த சுற்றறிக்கையை திரும்பப் பெறும்படி கோரி, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதலாம்.

<u>திரு. ச. இராமச்சந்திரன்:</u> மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அவ்வப்போது பல்வேறு துறைகளிலும் ஆங்கிலத்தை அகற்றி இந்தியைக் கொண்டுவரவேண்டும் என்பதற்கு அரசியல் சட்டத்திலேயே இடம் இருக்கின்ற காரணத்தால் இப்பிரச்சினைகள் தொடர்கின்றன. ஆகவே அரசியல் சட்டத்தில் தமிழையும் ஆட்சி மொழியாக சேர்க்கவேண்டுமென்கின்ற வகையில் அவர்களுக்குத் தெரிவிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? சிங்கப்பூரில் மலேசியாவில், ஏன் தினந்தோறும் தமிழர்களைக் கொல்லும் இலங்கையில் கூட தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது, அதேபோல இந்திய அரசின் ஆட்சி மொழியாகத் தமிழும் ஆக்கப்படவேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா ?

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழும் ஆட்சிமொழியாகத் தான் இருக்கவேண்டுமென்டதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்தே நாம் கேட்டு வருகிறோம். எல்லா தேசிய மொழிகளையும் ஆட்சிமொழியாக ஆக்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன என்ற நிலையில், அவர்கள் அதைத் தள்ளிப்போடுவதைப் போல இந்தியைத் திணிக்கின்ற முயற்சியில்

ஈடுபட்டு வருகிறார்கள். இந்தியைத் திணிப்பதினாலே இங்கே பல்வேறு பிரச்சினைகள் உண்டாகின்றன ஆங்கிலம் ஒரு காலத்திலே திணிக்கப்பட்ட மொழி தான். அது ஆளுகிறவர்களுடைய மொழியாக அன்றையதினம் இருந்து திணிக்கப்பட்டது. பிறகு அவர்கள் போனதற்குப் பிறகு ஆளுகிற மொழியாக இல்லை. நமக்குப் பணி செய்கிற மொழியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதை எடுத்து விட்டு அந்த இடத்திலே இந்தியைத் திணிக்கவேண்டுமென்ற முயற்சி செய்கிறபோது அது ஒரு புதிய ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதைப்போல அவர்கள் அந்த மொழித் திணிப்பைச்செய்து கொண்டு வருகிறார்கள். இதை ஆரம்பக் காலத்திலே நாம் எதிர்த்திருக்கிறோம். அதை எதிர்த்துப் போராடி இருக்கிறோம். அப்போது நமக்குத் தரப்பட்ட உறுதிமொழியானது. 'இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரைக்கும் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும்' என்று சொல்லிவந்தார்கள். ஆனால் அரசியல் சட்டத்திலேயிருக்கிற சில பிரிவுகளை வைத்துகொண்டு அவ்வப்போது ஆட்சிமொழியாக நுழைப்பது மட்டுமல்ல, பயிற்சி மொழியாக இந்தியைத் திணிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

முற்பகல் 11.40

தமிழக அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடவடிக்கை எடுத்து நாங்கள் கடிதங்களை எழுதிக் கொண்டு இருக்கின்றோம். உதாரணத்திற்கு, திடீரென்று ஒரு நாள் மருத்துவப் படிப்பையும், இன்ஜினியரிங் படிப்பையும் கூட ஏன் இந்தியிலே நடத்தக் கூடாது என்று ஒரு கடிதம் எழுதுகிறார்கள். அதற்கு தேசிய கல்விக் கொள்கையிலேயே, அவரவர்கள் வட்டார தாய்மொழியில் தான் கல்வி தர வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, நீங்கள் இந்தியை திணிக்கச் சொல்வது சரியல்ல ; இருக்கின்ற ஆங்கிலம் இருக்கும் இல்லையென்றால் அந்த இடத்திற்கு தமிழ்தான் வரும் என்பதை அவர்களுக்குத் தெளிவாகத் பதில் சொல்லி இருக்கின்றோம். தமிழ் இருக்கலாம் என்று நாம்தான் கேட்டுக் கொண்டு இருக்கின்றோம். மற்ற மாநிலங்கள் இந்தியை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். ஆக, இப்போது இருக்கிற நிலைமை, தமிழை ஏற்றுக் கொள்வதிலே மத்திய அரசுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. எல்லா மொழிகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மற்றவர்கள் கேட்பதாக இல்லை. நாம்தான் போராடிக் கொண்டு இருக்கின்றோம். நாம்தான் இருமொழி கொள்கையைப் பின்பற்றிக் கொண்டு இருக்கின்றோம். நம்முடைய தமிழ் மத்திய ஆட்சி மொழியாவதில், இந்தியோடு சேர்ந்து அதையும் ஆட்சி மொழியாக்குவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை.

அதோடு மட்டுமல்ல, இந்தியைத் திணிப்பதன் மூலம் ஒரு மொழி ஏகாதிபத்தியம் ஏற்படுகிறது என்று உணர்கின்ற காரணத்தினாலே, அந்தப் பிரச்சினையிலே மத்திய அரசு மிகவும் கவன

மாக இருக்க வேண்டும். எப்படி மதங்களைப் பொறுத்தமட்டில் மதச் சார்பற்ற தன்மையைப் பின்பற்றுகிறோமோ, அதேபோல மொழி சார்பற்ற தன்மையைப் பின்பற்றுகிற ஒரு நல்லுறவை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மன்றத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு இருக்கிற தீர்மானம், எல்லா தேசிய மொழிகளையும் இந்தியாவினுடைய ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என்று இருந்தாலும், முதல் கட்டமாக தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு இந்த அரசு வற்புறுத்த வேண்டும். ஏனென்னில், வட மொழிக் கலப்பு இல்லாத தனித் தன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழி. அதோடு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இந்திய அரசினுடைய நிறுவனங்கள், துறைகள் ஆகியவற்றில் அவைகளும் தமிழிலே செயல்படுத்துவதற்கு கூட ஒரு வாய்ப்பு உண்டு. ஆகவே, முதல்கட்டமாக இந்தியாவினுடைய ஆட்சி மொழிப் பட்டியலில் தமிழைச் சேர்க்க வேண்டும் என்று இந்த அரசு இந்திய அரசுக்குக் கடிதம் எழுதுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா தேசிய மொழிகளையும் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற கருத்தை நாம் சொல்லிக் கொண்டு வந்தாலும், நம்மைப் பொறுத்தமட்டில் நம்முடைய தாய் மொழியான அல்லது தமிழ் நாட்டினுடைய வட்டார மொழியான தமிழ் ஆட்சிமொழியாக, மத்திய அரசினுடைய ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்பது தான் நம்முடைய உடனடியான நோக்கம் ஆகும் ; நம்முடைய இறுதி நோக்கமும் அதுதான். ஆக, அந்த முறையிலே தமிழக மக்களினுடைய உணர்வுகளை மதித்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் தொடர்ந்து கேட்டுக் கொண்டு இருக்கின்றோம். மறுபடியும் தொடர்ந்து எழுதுவதிலே நமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் பகுதியில் யானைக்கால் நோய் பரவுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. கு. லாரன்ஸ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள், திரு. கு. லாரன்ஸ்.